# 13-10-2024 செய்தி

## உலக பட்டினிக் குறியீடு : 'தீவிர பகுப்பாய்வு' பிரிவில் இந்தியா!

- உலகின் 127 நாடுகளுக்கு இடையேயான நிகழாண்டின் சர்வதேச பட்டினிக் குறியிட்டில் இந்தியா 105 -ஆவது இடத்தில் உள்ளது. இதன் மூலம் பட்டினி விவகாரத்தில் தீவிர பகுப்பாய்வுக்கு உள்ளடக்கிய பிரிவில் இந்தியா இடம் பெற்றுள்ளது.
- கடந்த ஆண்டு வெளியான பட்டியலில் மிகவும் பின்தங்கிய 111 இடத்தில் தீவிர அளவில் இருந்த இந்தியா, தற்போது 105 இடத்தில் உள்ளது.
- உலக நாடுகளில் பசியின் அளவை அளவிடுவதற்கும் கண்காணிப்பதற்குமான ஒரு கருவியாக ஊட்டச்சத்து குறைபாடு குழந்தை இறப்பு ஆகியவற்றின் அடிப்படையிலான சர்வதேச பட்டினி குறியீடு அறியப்படுகிறது.
- நிகழாண்டு சர்வதேச பட்டினி குறியீட்டின் 19 -ஆவது பதிப்பு அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த மனித நேய அமைப்பான 'கன்சர்ன் ஓல்டுனிவட் மற்றும் ஜெர்மனி நிறுவனமான வெல்ட் ஹங்கர்லைப்' ஆகிய அமைப்புகளால் இந்த வாரம் வெளியிடப்பட்டது.

**தீவிர பகுப்பாய்வு :**

- இதில் உலகின் 136 நாடுகளில் கணக்கெடுக்கப்பட்ட பட்டினிக் குறியீட்டின் அடிப்படையில் 127 நாடுகளுக்கான இடையே தயாரிக்கப்பட்ட தரவரிசையில் 27.3 புள்ளிகளுடன் இந்தியாவுக்கு 105 -ஆவது இடம் கிடைத்துள்ளது.
- இதன் மூலம் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய 42 நாடுகளில் உள்ளடக்கிய தீவிரமான பகுப்பாய்வு செய்ய வேண்டிய பிரிவுக்குள் இந்தியாவும் நுழைந்துள்ளது.
- அதே சமயம், நமது அண்டை நாடுகளான வங்கதேசம், நேபாளம், இலங்கை ஆகியவை 'நடுத்தர' பிரிவின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன.

**கணக்கீட்டின் கூறுகள் :**

- இந்தியாவின் புள்ளிகள் நான்கு கூறுகளின் மதிப்புகளை அடிப்படையாகக் கொண்டவை.

1. மக்கள் தொகையில் 13.7 சதவீதம் பேர் ஊட்டச்சத்து குறைபாட்டுடன் உள்ளனர்.
2. ஐந்து வயதுக்குள்பட்ட குழந்தைகளில் 35.5 சதவீதம் பேர் வளர்ச்சி குன்றியவர்களாகவும் உள்ளனர்.
3. இவர்களில் 18.7 சதவீதத்தினர் எடை குறைந்தவர்களாகவும் உள்ளனர்.
4. மேலும் 2.9 சதவீத குழந்தைகள் ஐந்து வயது நிறைவடைவதற்கு முன்பே இறக்கின்றனர்.

- குறியீட்டின் கணக்கீட்டில் போதுமான கலோரிகளை உட்கொள்ளாத நபர்களின் எண்ணிக்கை ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக குறைந்த உயரத்தில் உள்ள குழந்தைகளை வளர்ச்சிக் குன்றியவர்களாகவும் வரையறுக்கப்பட்டனர்.
- அதே போல், உயரத்திற்கு ஏற்ற அதிக எடை இல்லாதவர்களை எடை குறைந்தவர்களாகவும் போதிய ஊட்டச்சத்து இன்மை மற்றும் ஆரோக்கியமற்ற சூழல்களின் அபாயகரமான கலவையால் உயிரிழந்த குழந்தைகள் இறந்தவர்களாகவும் வகைப்படுத்தப்பட்டனர்.

**21 நாடுகளில் முதலிடத்தில் சீனா**

- இந்த நான்கு கூறுகளின் அடிப்படையில் பட்டியினின் தீவிரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் ஒவ்வொரு நாட்டிற்கும் புள்ளிகள் கணக்கிடப்பட்டன. அதில் பூஜ்ஜியம் சிறந்த மதிப்பெண் பட்டினி இல்லை மற்றும் 100 மோசமானது என்பதைக் குறிக்கிறது.
- 5 -க்கும் குறைவான மதிப்பெண்களுடன் குறியீட்டில் முதலிடத்தை சீனா, ரஷியா, குவைத் ஐக்கிய அரபு அமீரகம் உள்பட 22 நாடுகள் பகிர்கின்றன.

**'துயரம்' தொடரும் :**

- 'துயரம்' தொடரும் : ஆய்வின் அடிப்படையில் 2030 -ஆம் ஆண்டுக்குள் ஐ.நா.வின் நிலையான வளர்ச்சி இலக்கான பூஜ்ஜிய பட்டினியை அடைவதற்கான வாய்ப்புகள் மிகவும் அரிதாகவே இருக்கிறது.
- நடவடிக்கைகள் போதுமான அளவில் இல்லாததால் மேலும் பல்லாண்டுகளுக்கு உலகின் ஏழ்மையான நாடுகளில் பட்டியினியின் அளவு அதிகமாக இருக்கும்.
- உலக அளவில், ஒவ்வொரு நாளும் சுமார் 73.3 கோடி பேருக்கு போதுமான அளவு உணவு கிடைக்காததால் பட்டினியை எதிர்கொள்கின்றனர்.
- அதே நேரத்தில் சுமார் 280 கோடி மக்களுக்கு சத்தான உணவு கிடைப்பதில்லை.
- சில ஆப்பிரிக்க நாடுகளில் பட்டினி அபாயகரமான அளவைத் தாண்டி விட்டது.
- காஸா, சூடானில் நடந்த போர்கள் இந்த உணவு நெருக்கடிகளுக்கு வழிவகுத்தது. காங்கோ, ஹைதி, மாலி, சிரியா உள்ளிட்ட நாடுகளில் நடந்த உள்நாட்டு சண்டைகளும் உணவு நெருக்கடிகளை உருவாக்கின.

## ஜப்பான் அமைப்புக்கு அமைதிக்கான நோபல் பரிசு

- ஜப்பான் நாட்டைச் சேர்ந்த 'நிஹோன்' ஹிடாங்கியோ அமைப்புக்கு 2024 –ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.
- ஜப்பானின் ஹிரோஷிமா மற்றும் நாகசாகியில் அணுகுண்டு தாக்குதலால் பாதிக்கப்பட்டோரின் நலனுக்காக இந்த அமைப்பு தொடர்ந்து பணியாற்றி வருகிறது.
- இந்த அணுகுண்டு தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஜப்பானில் கடந்த 1956 –இல் நிஹோன் ஹிடாங்கியோ அமைப்பு தொடங்கப்பட்டது.
- அணு ஆயுதம் இல்லாத உலகை உருவாக்கவும், அணு ஆயுதங்களை மீண்டும் பயன்படுத்தக் கூடாது என்பதை வலியுறுத்தியும் சர்வதேச அளவில் இந்த அமைப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.
- இந்த முயற்சிகளுக்காக, அமைதிக்கான நோபல் பரிசு இந்த அமைப்புக்கு அறிவிக்கப்பட்டது.
- ஈரானில் பெண்களின் அடக்குமுறைக்கு எதிராக போராடியதற்காக 'நர்கீஸ் முகமதி' என்பவருக்கு 2023 –ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.
- 2014 –ஆம் ஆண்டு இந்தியரான 'கைலாஷ் சத்யார்த்திக்கும்', பாகிஸ்தானைச் சேர்ந்த 'மலாலாவுக்கும்' இப்பரிசு பகிர்ந்தளிக்கப்பட்டது. குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளைக் கண்டித்தும், குழந்தைகளின் கல்வியை உறுதி செய்யவும் ஆற்றிய சேவைகளுக்காக இவர்களுக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

1. மருத்துவத்துக்கான நோபல் பரிசு அமெரிக்காவைச் சேர்ந்த 'விக்டர் ஆம்புரோஸ், கேரி ருவ்குன்' ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டது.
2. இயற்பியலுக்கான நோபல் பரிசு அமெரிக்காவைச் சேர்ந்த 'ஜான் ஹாப்ஃபீல்டு', கனடாவைச் சேர்ந்த 'ஜியோஃபெரி ஹின்டன்' ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டது.
3. வேதியியலுக்கான நோபல் பரிசு அமெரிக்காவைச் சேர்ந்த 'டேவிட் பக்கர்', பிரிட்டனைச் சேர்ந்த 'டெமிஸ் ஹஸ்ஸாபிஸ்', 'ஜான், ஜம்பெர்' ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டது.
4. இலக்கியத்துக்கான நோபல், தென்கொரிய பெண் எழுத்தாளர் 'ஹான் காங்குக்கு' அறிவிக்கப்பட்டது.

## 50 ஆண்டுகளில் முதல்முறையாக சஹாரா பாலைவனத்தில் மழை வெள்ளம்

- உலகின் மிகப்பெரிய பாலைவனமாக காணப்படும் சஹாரா பாலைவனம் ஆப்பிரிக்க கண்டம் மொராக்கோவின் தென்கிழக்குப் பகுதியில் உள்ளது.
- மிகவும் வறண்ட பகுதியான இங்கு மழை பொழிவதே அரிது. அதிலும் வெள்ளம் ஏற்படுவது அதிசய நிகழ்வு. அந்த வகையில் சஹாரா பாலைவனத்தில் வழக்கமாக ஓராண்டில் பெய்யக்கூடிய மழை இரண்டே நாட்களில் பெய்ததால் அங்கு வெள்ளம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.
- மொராக்கோ நாட்டு தலைநகர் ரபாட்டாவில் இருந்து 450 கி.மீ, தொலைவில் உள்ள டாகோயுனைட் கிராமத்தில் பெய்த கனமழையால் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. அங்கு கடந்த செப்டம்பர் மாதத்தில் ஒருநாள் 24 மணிநேரத்தில் 100 மி.மீ., மழைப்பொழிவு பதிவாகியுள்ளது.
- குறைந்த நேரத்தில் இவ்வளவு மழைப்பொழிவு கடந்த 30 –லிருந்து 50 ஆண்டுகளில் ஏற்பட்டதில்லை என்று மொராக்கோ வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- இத்தகைய எதிர்பாராத கனமழையால் சஹாரா பாலைவனத்தில் உள்ள இரிக்கி என்ற வறண்ட ஏரியில் நீர் நிரம்பியுள்ளது. ஜகோரா என்ற பகுதிக்கும் டாடா என்ற இடத்துக்கும் இடையில் கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு காலமாக வறண்டு கிடந்த இந்த ஏறி அடைமழையினால் ஏற்பட்ட வெள்ளத்தால் நிரம்பியுள்ளது. நிரம்பி வழியும் இரிக்கி ஏரியின் காட்சிகள் கொண்ட புகைப்படங்களை நாசா வெளியிட்டுள்ளது.

## ரத்தன் டாடாவின் இறுதிச் சடங்கு

**பார்ஸி மரபு :**

- பார்ஸி மதத்தில் ஒருவரது பிறப்பும் இறப்பும் இயற்கையில் இருந்து வந்து அங்கேயே திரும்புவதாக நம்பப்படுகிறது.
- அதன் அடிப்படையில் மரணித்தவரின் உடல், அமைதிக் கோபுரம் என்ற 'தி டவர் ஆஃப் சைலன்ஸ்' என்ற பிரத்யேகமாக வடிவைக்கப்பட்ட தக்மாவின் மேல் வைக்கப்படுகிறது.
- அந்த அமைப்பு கிணற்றின் மேல்பரப்பு போன்ற அமைப்பைக் கொண்டது. அங்கு இறந்தவரின் உடல் கழுகுகள், பறவைகளுக்கு இரையாகக் கொடுக்கப்படுகிறது.
- சதைப் பிண்டங்களை பறவைகள் உணவாக்கிக் கொள்ள, எஞ்சிய எலும்புத் துண்டுகள் கிணற்றுக் குழிக்குள் விழுந்து காலப்போக்கில் சிதைந்து போகும்.
- இந்த நடைமுறைக்கு 'டோக்மெனாஷினி' என்று பெயர். இதன்படி, நெருப்பு, பூமி, நீர் ஆகிய புனிதக்கூறுகளை மாசுபடுத்தாமல், இயற்கைக்கும் பாதிப்பை ஏற்படுத்தாமலும் உடல் இயற்கைக்கே திரும்பும் என்பது பார்ஸிக்களின் மத நம்பிக்கை.